**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**D051 தமிழகக் கலைகள்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காஞ்சிபுரத்தின் இயற்கையழகைக் கூறும் ஆற்றுப்படை நூல் யாது?
2. கல்லணை யாரால் கட்டப்பட்டது?
3. சுங்கச்சாவடி முதன் முதலில் எங்கு அமைக்கப்பட்டது?
4. கங்கைகொண்டான் என அழைக்கப்பட்டவன் யார்?
5. கட்டடக் கலையின் பொற்காலம் எது?
6. சிற்பக்கலைஞர் சிலப்பதிகாரத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
7. பாண்டியர்களின் ஒரே ஒற்றைக்கல் இரதம் அமைந்த மாவட்டம் எது?
8. மண் சிற்பம் என்பது எவ்வாறு அழைக்கப்பட்டது?
9. எழுத்து மண்டபம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
10. தமிழ்நாட்டு ஓவியக் கலையின் சிகரம் எது?
11. பண் இக்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

12. தம்பிரான் தோழர் என அழைக்கப்பட்டவர் யார்?

13. நாடகம் குறித்துக் கூறிய இலக்கண நூல் எது?

14. வில்லுப்பாட்டு என்றால் என்ன?

15. கூத்து நூலின் ஆசிரியர் யார்?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. அகழி என்றால் என்ன?
2. நாளங்காடி என்பது எதைக் குறிக்கும்?
3. மும்மலங்கள் எவை?
4. பல்லவர்களின் கோயில் அமைப்புமுறை எத்தனை வகைப்படும்?
5. முத்தமிழ் என்பன எவை?
6. நாடகத்திற்கான செய்தி களமாக விளங்கியவை எவை?
7. காட்சித்திரைகள் எத்தனை வகைப்படும்?அவை யாவை?
8. வேத்தியல் பொதுவியல் என்பன எதைக் குறிக்கும்?

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) மூவேந்தர்களும், கோட்டைகளும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பாண்டியர்களின் சிற்பக்கலை குறித்துக் கட்டுரைக்க.

2. (அ) தேவார மூவர் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடகக் கலை வடிவங்களும், ஆடுகளங்களும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

3. (அ) கரகாட்டத்தின் சிறப்புகளை விவரி.

(அல்லது)

(ஆ) பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் சிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

* * *